# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 89 | 4 Pages | 01.11.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 89 | 4 பக்கங்கள் | 01.11.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கனடாவில் மாணவர் விசா திட்டத்தில் புதிய மாற்றம் மோசடியை தடுக்க நடவடிக்கை

ஒட்டாவா, நவ. 1

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் கல்வி கற்க இந்திய மாணவர்கள் பலர் விண்ணப்பிக்கிறார்கள். இதற்கிடையே சமீபத்தில் ஏஜென்சிகள் மூலம் கனடாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேர்ந்த இந்திய மாணவர்களிடம் போலி ஆவணங்களை அவர்களுக்கு தெரியாமல் கொடுத்து அனுப்பியது தெரியவந்தது.

இதையடுத்து இந்தியாவை சேர்ந்த 700 மாணவர்களை வெளியேறுமாறு கனடா தெரிவித்தது. இந்த மோசடியில் பாதிகப்பட்ட மாணவர்கள் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்நிலையில் மாணவர் விசாவில் வருபவர்களிடம் ஏஜெண்டுகள் செய்யும்மோசடிகளைதடுக்ககனடாஅரசுபுதியவிதிகளைஅறிவித்துள்ளது. அதன்படி கனடாவில் முதுகலை கல்வி கற்பிக்கும் அனைத்து கல்வி நிறுவனங்களும், ஒவ்வொரு விண்ணப்பதாரரின் ஏற்பு கடிதத்தையும் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சகத்துடன் சரி பார்க்க வேண்டும். ஒவ்வொரு கல்வி நிறுவனங்களும் அமைச்சகத்திடம் இருந்து சரி பார்க்கப்பட்ட ஏற்றுக் கொள்ளும் கடிதத்தை பெற வேண்டும். இந்த புதிய கொள்கை வருகிற டிசம்பர் 1ந்தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து அமைச்சர் மார்க் மில்லர் கூறும்போது, கனடாவுக்கு வரும் பிற நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த விரும்பவில்லை என்று குறிப்பிட்ட அவர் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஏமாற்றப்படாமல் பாதுகாப்பதே தனது நோக்கம் என்றார்.

இந்த நடவடிக்கை இதற்கு முன்பு மாணவர்கள் ஏமாற்றப்பட்டதைப் போன்ற சூழல் ஏற்படாமல் தடுக்கும் என்பதோடு உண்மையான ஏற்பு கடிதங்களின் அடிப்படையில் மட்டுமே படிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதையும் உறுதி செய்யும் என்று கனடா அரசு தெரிவித்தது.

## இங்கிலாந்தில் இந்திய பெண் கத்தியால் குத்திக்கொலை: வாலிபர் கைது

லண்டன், நவ. 1

இங்கிலாந்தின் தெற்கு லண்டனில் உள்ள குரோய்டனில் இந்தியாவை சேர்ந்த மேஹக் சர்மா என்ற பெண் வசித்து வந்தார். இந்த நிலையில் மேஹக் சர்மா உடலில் கத்தியால் குத்தப்பட்ட காயங்களுடன் பிணமாக கிடந்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து பெண்ணின் உடலை கைப்பற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கொலை தொடர்பாக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஷைலி ஷர்மா (வயது23) என்ற வாலிபர் கைது செய்யப்பட்டார். அவர் குரோய்டனின் ஆல்ட்ரீவே பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர். அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கொலை செய்யப்பட்ட மேஹக் சர்மா சமீபத்தில்தான் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு வந்துள்ளார். கைது செய்யப்பட்ட நபர், அவருக்கு தெரிந்தவரா? என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை. மேஹக் சர்மா மரணம் குறித்து அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவரது பிரேத பரிசோதனை இன்று நடைபெறும் என்றும் போலீசார் தெரிவித்தனர்

## மஸ்கின் முயற்சிகள் தோல்வியா? பாதிக்கு மேல் குறைந்த சந்தை மதிப்பு



அமெரிக்கா, நவ. 1

இணையதள பயனர்களின் உரையாடல்களுக்கான பிரபல சமூக வலைதளம், அமெரிக்காவை மையமாக கொண்ட எக்ஸ் (முன்னர், டுவிட்டர்). இந்த வலைதளத்தில் பயனர்கள் தங்கள் கருத்துக்களை செய்தி, புகைப்படம், ஆடியோ, வீடியோ, கோப்பு உட்பட அனைத்து வடிவங்களிலும் பிற பயனர்களுடன் பரிமாறி கொள்ளலாம்.

2006ல் அமெரிக்காவில் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தை, கடந்த 2022 அக்டோபர் மாதம், உலகின் நம்பர் 1. கோடீசுவரரும், அமெரிக்காவை சேர்ந்த பிரபல தொழிலதிபருமான எலான் மஸ்க், சுமார் ரூ.3 லட்சத்து 37 ஆயிரம் கோடிக்கு ($44 பில்லியன்) விலைக்கு வாங்கினார்.

எலான் மஸ்க், 'டுவிட்டர்' வலைதளத்தை விலைக்கு வாங்கியதிலிருந்து அதன் மதிப்பை உயர்த்த பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். முன்னதாக அதன் தலைமை செயல் அதிகாரியை மாற்றினார். பிறகு அவர் பல ஊழியர்களை பணி நீக்கம் செய்தார்; ஒரு சிலர் அவரது நடவடிக்கைகள் பிடிக்காமல் ராஜினாமா செய்தனர்.

தொடர்ந்து மஸ்க், வலைதளத்தின் பெயரை 'எக்ஸ்' என மாற்றினார். எக்ஸ் வலைதள உள்ளடக்கத்தை பயனர்கள் உபயோகப்படுத்த பல கட்டுப்பாடுகளை கொண்டு வந்தார். பல இலவச சேவைகளை நிறுத்தியஎலான்மஸ்க்,சந்தாமுறையில்சேவைகளைமாற்றியமைத்தார்.

இவரது செயல்முறைகளால் அந்நிறுவனத்தின் சந்தை மதிப்பு உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எலான்மஸ்க் விலைக்கு வாங்கி 1 வருடம் கடந்த நிலையில், தற்போது அந்நிறுவனத்தின் சந்தை மதிப்பு சுமார் ரூ. 1 லட்சத்து 58 ஆயிரம் கோடி ($19 பில்லியன்) என குறைந்துள்ளது. இது அவர் விலைக்கு வாங்கிய விலையை விட பாதிக்கும் கீழே என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார் நிறுவனமான எக்ஸை பங்குச்சந்தையில் பதிவு செய்யும் திட்டமிட்டிருந்தார் எலான் மஸ்க். ஆனால், தற்போது அதன் சந்தை மதிப்பு மிகவும் குறைந்திருப்பதால், அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# தமிழகத்தில் புதிய தொழில் புரட்சி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, நவ. 1

சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேபிட்டாலாண்ட் குழுமத்தின் டெக்னோ பார்க் ஐ.டி. நிறுவனம் பல்லாவரம் ரேடியல் சாலையில் சர்வதேச தொழில்நுட்ப பூங்காவை அமைத்துள்ளது.




50 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைந்துள்ள இந்த ஐ.டி. நிறுவனத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் புதியதொரு தொழில் புரட்சி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு சான்றாக, ஏராளமான தொழில் நிறுவனங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டு இருக்கிறது. அந்த வரிசையில் கேப்பிட்டாலேண்ட் நிறுவனமும் இணைந்திருப்பது எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. 5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டிருக்கின்ற இந்த சர்வதேசத்தொழில்நுட்பப்பூங்காவில், 50 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரிகிற அளவுக்கான உலகத்தரம் வாய்ந்த அலுவலக இடங்கள் கட்டித்தர நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது இன்றைக்கு மிக மிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது.

முதல் கட்டமாக, இன்றைக்கு 1.3 மில்லியன் சதுர அடிக்கான பூங்கா தயார் நிலையில், துவக்கி வைக்கப்பட இருக்கிறது.

இரண்டாவது கட்டத்தின் கட்டுமானப் பணிகளையும் துவக்கி இருப்பதாக இந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறது. கேப்பிட்டாலேண்ட் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கும் தமிழ்நாடு அரசு எல்லா உதவிகளையும் செய்யும்.

நான் கடந்த மே மாதம் சிங்கப்பூருக்கு அரசுமுறைப் பயணமாக சென்றிருந்தேன். அங்கே கிடைத்த வரவேற்பும், உற்சாகமும் எங்களால் மறக்க முடியாதது. இந்தப் பயணத் தின்போது, கேப்பிட்டாலேண்ட் நிறுவனத்தின் அதிகாரி சஞ்சீவ் தாஸ் குப்தாவை சந்தித்து, அவர்கள் நிறுவனம் பல முதலீட்டுத் திட்டங்களை தமிழ்நாட்டில் மேற்கொள்ளுவதை பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினேன். அதன் தொடர்ச்சியாக, இந்த விழா நடைபெறுவது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது.

எங்கள் ஆட்சியின் மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். தொழில் துறையில் முதன்மை மாநிலமாக முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அது மட்டுமல்ல, இந்த வளர்ச்சி சீராகவும், பரவலாகவும் இருக்க வேண்டும் என்று மாநிலத்தில் இருக்கின்றஇரண்டாம்மற்றும்மூன்றாம் அடுக்கு நகரங்களிலும் 9 நியோ டைடல் பார்க்குகள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கின்ற வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்துக் கொண்டு வருகிறோம். வளர்ந்து வருகின்ற துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கின்ற வகையில், துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறோம். அந்த வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள், புத்தாக்கத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களை தமிழ்நாட்டில் பெருமளவில் ஈர்ப்பதற்காக திட்டங்கள் தீட்டினோம்.

உலக அளவில், அதிவேகமாக ஏற்பட்டு வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நம்முடைய தொழில்துறையும் பயணம் செய்வது இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்கின்ற நோக்கத்தில்தான் "தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை 2022" கடந்த ஆண்டு ஜூலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது. இதற்குப் பிறகு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புத்தாக்கம், புத்தொழில்கள் மற்றும் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தொழில்துறை கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்வோர் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக,

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் குளோபல் கேப்பபிலிட்டி சென்டர்சின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. முப்பதுக்கும் மேற்பட்ட ஜி.சி.சிக்கள் தங்களுடைய புதிய நிறுவனங்கள் அல்லது விரிவாக்கத்திட்டங்களை நிறுவியிருக்கிறார்கள். யு.பி.எஸ், வால்மார்ட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி போன்ற சர்வதேச நிறுவனங்கள் தங்களுடைய ஜி.சி.சி. மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களை அண்மையில் நிறுவியிருக்கிறது. உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், தமிழ்நாடு உலக அளவில் சிறந்து விளங்கி வருகிறது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தும். இந்த வேகத்தை பார்க்கின்றபோது "2030ம்ஆண்டிற்குள்1டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற எங்கள் இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது.

பிரான்ஸ்நாட்டைச்சேர்ந்ததசோ சிஸ்டம்,

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சீமென்ஸ்

அமெரிக்க நிறுவனமான ஜி.இ. ஏவியேஷன் உடன் இணைந்து, மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில் புத்தாக்க மையங்களை தமிழ்நாடு அரசு அமைத்திருக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூரில் இருக்கின்ற சிப்காட் தொழிற் பூங்காக்களில், உலகத் தரம்வாய்ந்த தொழில் புத்தாக்க மையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, ஒருதுடிப்பான தகவல் தொழில்நுட்ப சூழலமைப்புடன் வளர்ச்சிக்குத் திறன் இடைவெளி ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது என்று தான், என்னுடைய கனவுத்திட்டமான, நான் முதல்வன் திட்டத்தை முழு முனைப்புடன் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். உயர்கல்வி கற்பிக்கின்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சிகளை வழங்கி, அவர்கள் துறையில் முதன்மையானவர்களாக திகழச் செய்யவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்.

இவை எல்லாம் முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை விதைத்திருக்கிறது. இந்த சீரிய முயற்சிகள் காரணமாகதான், தமிழ்நாட்டில், முதலீடுகளின் வரத்து வளர்ச்சியடைந்து வருவதை கண்கூடாக பார்க்கின்றோம்.

இதற்கெல்லாம் மணிமகுடமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாடு வருகின்ற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கின்றோம். உங்களைப் போன்ற நிறுவனங்களுடன் சேர்ந்துதான் இந்த மாநாட்டை நடத்த இருக்கிறோம். உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கிறார்கள். பல நிறுவனங்கள் அந்த மாநாட்டில் பங்கேற்று பெருமைப்படுத்த இருக்கிறார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# திருப்பூர் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்: மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

திருப்பூர், நவ. 1

டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 02.11.2023 அன்று நடைபெறவிருந்த இத்தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நிர்வாக காரணங்களால் 05.11.2023 அன்றைய தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை 04212999152 அல்லது 94990 55944 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# திருப்பூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ந.ரியாஸ் அகமது பாசா தகவல்

திருப்பூர், நவ. 1

கேரளா மாநிலத்தில் ரயில் நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையிலிருந்து மீட்கப்பட்ட மாற்றுதிறனாளி சிறுவன் கேரளா மாநிலத்தில் உள்ள பாலக்காடு ரயில் நிலையத்தில் சுமார் 4 வயது மதிக்கதக்க மாற்றுத்திறனாளி சிறுவன் 14.09.2022 அன்று ரயில்வே பாதுகாப்பு படையினரால் கண்டறியப்பட்டு, மீட்கப்பட்டு பாலக்காடு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், ரயில் பயணிகளின் தகவலின் படி, சிறுவனை இரண்டு பெண்கள் திருப்பூர்ரயில்நிலையத்தில் தொடர் வண்டி எண்: 12511ல் விட்டு சென்றதாக சந்தேகிப்பதாகவும், பாலக்காடு குழந்தைகள் நலக்குழுவின் ஆணைப்படி, சிறுவன் பாலக்காடு குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறுவன் ஹிந்தி மொழி பேசுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சிறுவனைக் குறித்த விவரங்கள் தெரியவருபவர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 7வது தளம், அறை எண்:705, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் 641 604. என்ற முகவரி அல்லது தொலை பேசிஎண் : 0421 2971198லும் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கிடைக்கப்பெற்ற இடம் : கேரளா மாநிலத்தில் உள்ளபாலக்காடுரயில் நிலையம்கிடைக்கப்பெற்ற தேதி : 14.09.2023

சிறுவனின் வயது : சுமார் 4 வயது மதிக்கத் தக்க மாற்றுத்திறனாளி சிறுவன்

சிறுவன் குறித்த விவரங்கள் தெரிந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

மாவட்டகுழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்டகுழந்தைகள் பாதுகாப்பு அலகு,
7வது தளம், அறைஎண்:705
மாவட்டஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் 641 604.
தொலைபேசிஎண் : 0421 2971198

தலைவர்
குழந்தைகள் நலக்குழு,
7வது தளம், அறைஎண் :723
பல்லடம் ரோடு, திருப்பூர்.
தொலைபேசிஎண்:04212424416

# தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்., ஊர்வலத்துக்கு அனுமதி அளிக்க வேண்டும்: இந்து முன்னணி வலியுறுத்தல்

திருப்பூர், நவ. 1

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்துக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இந்து முன்னணி மாநிலத்தலைவர்காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம் வருமாறு:

கடந்த 1925ம் ஆண்டு விஜயதசமியன்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தொடங்கப்பட்டது.

அதன் நிறுவன நாளும், இந்நாட்டின் வெற்றி திருநாளுமாக கொண்டாடப்படும் விதமாக விஜயதசமி நாளில் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலம் கடந்த 98 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அரசியல் கட்சி ஊர்வலமாக இல்லாமல் கட்டுப்பாடு உள்ள அணிவகுப்பாக அந்த ஊர்வலம் நடைபெறும்.

தனிநபரை குறிப்பிட்ட வாழ்க, ஒழிக கோஷங்கள் எதுவும் எழுப்பப்படாது. சீருடை அணிந்த தன்னார்வலர்களால் மக்களிடையே கட்டுப்பாடு, தேசபக்தி, ஒற்றுமை, ஒழுங்கு போன்ற நற்சிந்தனையை ஏற்படுத்தும் வகையில் அணிவகுப்பு நடைபெறும். கேரளம், புதுச்சேரி உள்பட எல்லா மாநிலங்களிலும் எந்த நிபந்தனைகளும் இன்றி ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தநிகழ்ச்சியும்அமைதியாக உற்சாகமாக நடைபெற்றது.

எந்த மாநிலத்திலும் இல்லாத சட்டம் ஒழுங்கு பிரச்னை தமிழகத்தில் இருக்கிறது என தமிழக அரசு கருதுவது திமுக., அரசின் ஆளுமை தன்மையில் உள்ள குறைபாடாகத்தான் தெரிகிறது.

அதே சமயம் தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்தில் எந்த பிரச்னையும் ஏற்பட்டதில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அரசு தரப்பில் உள்நோக்கத்துடன் இடையூறு செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஊர்வலத்துக்கு நீதிமன்றம் அனுமதி அளிக்க வேண்டும் என்று தெரிவித்தும் தமிழகஅரசு செயப்படுத்தாமல் இருப்பது நீதிமன்ற அவமதிப்பாகும். இது ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிரானதாகும். ஆகவே, தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அரசு காலதாமதமின்றி அனுமதி அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழி அனைத்துத்துறை அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர்.

# காங்கயம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.74 ஆயிரத்திற்கு தேங்காய் பருப்பு ஏலம்

முத்தூர், நவ. 1

திருப்பூர் மாவட்டம், காங்கயம் நகரம், கரூர் சாலை பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் பருப்பு மறைமுக ஏல முறையில் விற்பனை நடைபெற்றது. இதில் காங்கயம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச்சேர்ந்த4விவசாயிகள் 18 மூட்டைகள் (902 கிலோ) தேங்காய் பருப்பினை (கொப்பரை) விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில்காங்கயம், வெள்ளகோவில், முத்தூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 4 வியாபாரிகள் தேங்காய் பருப்புகளை வாங்க வந்திருந்தனர். இங்கு நடைபெற்ற ஏலத்தில் ரூ.74 ஆயிரத்திற்கு விற்பனையானது. தேங்காய் பருப்பு அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.84 க்கும், குறைந்த பட்சமாக ரூ.60க்கும், சராசரியாக ரூ.60க்கும்ஏலம்போனது. ஏலத்திற்கான ஏற்பாடுகளை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் செ.ராமன் செய்திருந்தார்.







கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு அனைத்துத்துறை அலுவலர்களும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

# காங்கயம் வாரச்சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.120க்கு விற்பனை: இல்லத்தரசிகள் அதிர்ச்சி

முத்தூர், நவ. 1

காங்கயம் வாரச் சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.120க்கு விற்பனை செய்யப்பட்டது.

காங்கயம் பஸ் நிலையம் அருகே வாரச்சந்தை வளாகம் உள்ளது .வாரம் தோறும் திங்கட்கிழமை கூடும் இந்த சந்தையில் காய்கறிகள், பழங்கள், மளிகை சாமான்கள், கீரைகள்,வீட்டு உபயோக பொருட்கள் முதற்கொண்டு அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு வாரம் தோறும் திங்கட்கிழமை அன்று 500க்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டு விற்பனை நடைபெறும். வார சந்தைக்கு காங்கயம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான நகர, கிராம மக்கள் இங்கு வந்து ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறிகள், மளிகை சாமான்கள் மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி செல்வார்கள்.

இதன் காரணமாகவே வாரந்தோறும் திங்கட்கிழமை இந்த சந்தை நாளில் இந்த பகுதியில் உள்ள விவசாய தொழிலாளர்கள் ,தேங்காய் களம், அரிசி ஆலை, தேங்காய் எண்ணெய் ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வார சம்பளத்துடன் விடுமுறை விடப்படுகிறது.

இதனால் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் நகர பகுதி மக்கள் இந்த சந்தைக்கு வந்து செல்வார்கள்.

நேற்று கூடிய வார சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.120க்கும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.80க்கும்,தக்காளிகிலோ ரூ.25க்கும் விற்பனை செய்யப்பட்டது. பெரிய வெங்காயத்தின் விலை இல்லத்தரசிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தற்போது பரவலாக பெய்து வரும் மழை காரணமாக பெரிய வெங்காயத்தின் வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை ஏற்றமாகஉள்ளது.மேலும் வரும் வாரங்களில் இன்னமும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு

திருப்பூர், நவ. 1

திருப்பூர்கலெக்டர்அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, புதிய குடும்ப அட்டை , சாலை வசதி, குடிநீர்வசதி எனபல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 361 மனுக்களைபெற்றுக்கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ்திருப்பூர்மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் சார்பில் விதவை உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர்உதவித்தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை, உயர்கல்வி உதவித்தொகை என 276 பயனாளிகளுக்கு ரூ.15,50,000 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிக்கான காசோலைகளை கலெக்டர் வழங்கினார்.

முன்னதாக கலெக்டர் தலைமையில்அனைத்துத்துறை அலுவலர்களும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் , தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(நிலம்) மலர், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் புஷ்பாதேவி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கண்காணிப்பாளர்கள் ஈஸ்வரி, விஜய கார்த்திக், துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# காங்கயத்தில் மின்நுகர்வோர் குறைதீர் கூட்டம்

முத்தூர், நவ. 1

காங்கயத்தில் மின் பயனீட்டாளர்கள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை நடைபெற உள்ளது. காங்கயம் கோட்டத்தில் மாதாந்திர மின் பயனீட்டாளர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், ஒவ்வொரு மாதமும் முதல் புதன்கிழமை அன்று நடைபெற்று வருகிறது. இம்மாதத்திற்கான குறைதீர்க்கும் கூட்டம் நாளை 1ந் தேதி காங்கயம் பஸ் நிலையம் அருகே சென்னிமலை சாலையில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் காலை 11 மணி முதல் மதியம் 1 மணிவரை மேற்பார்வை பொறியாளர் தலைமையில் நடைபெற உள்ளது. மின் பயனீட்டாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, தங்களின் குறைகளை தெரிவித்து,

நிவர்த்தி பெறலாம் என மின் வாரிய காங்கயம் செயற்பொறியாளர் கணேஷ் தெரிவித்துள்ளார்.

# பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் விவசாயிகள் பயன்பெற வேண்டுகோள்

உடுமலை, நவ. 1

ஆனைமலை வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் நடப்பாண்டில் தமிழக பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் பேஸ் 4 செயல்படுத்தப்பட உள்ளது. தோட்டக்கலைத் துறை வாயிலாக நீர் பாசனத்தில் புதிய திட்ட உத்திகளை செலுத்தி, விவசாயிகளின் வருவாயை பெருக்கி உதவும் புதிய பயிர்கள் மற்றும் ரகங்கள் அறிமுகம் செய்து வேளாண்மையை நவீனப்படுத்தி கொண்டுள்ளது.



இத்திட்டத்தில் ஆழியாறு பழைய ஆயக்கட்டு கிராமங்களான மார்ச்சநாயக்கன்பாளையம், பெரியபோது, ஒடையகுளம், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், காளியாபுரம், கோட்டூர், சோமந்துறை மற்றும் தென்சங்கம்பாளையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.இக்கிராமங்களில் பிரதான பயிரான தென்னையில், ஊடுபயிராக ஜாதிக்காய், திசு வாழை வழங்கப்பட உள்ளது.

நுண்ணீர் பாசன திட்டம், நிலப்போர்வை போன்ற உயர் தொழில் நுட்பத்தின் வாயிலாக நீர் மேலாண்மை, களை மேலாண்மை மற்றும் கூலி மேலாண்மை கட்டுக்குள்கொண்டு வரப்பெற்று விவசாயிகளுக்கு வருவாய் அதிகரிக்க செய்கின்றது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் பேஸ் 4 ஆனைமலை வட்டாரத்தில் செயல்படுத்த, 57.41 லட்சம் ஹெக்டேர் இலக்கு பெறப்பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது. திசு வாழை 72 ஹெக்டேர், ஜாதிக்காய் 65 ஹெக்டரும் நுண்நீர் பாசன திட்டம் 24 ஹெக்டேரிலும் செயல்படுத்தப்பட உள்ளது. நிலப்போர்வைக்குநான்கு ஹெக்டேரும் பெறப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி, தோட்டக்கலைத் துறை வாயிலாக செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தில், பயன்பெற உள்ள விவசாயிகள், சிட்டா அடங்கல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, ஆதார் அட்டை நகல் மற்றும் உரிமைச்சான்றுடன் தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் உழவன் செயலி வாயிலாக, முன்பதிவு செய்து விவசாயிகள் பயன் பெறலாம். மேலும் விபரங்களுக்கு, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் 98659 05505, உதவி தோட்டக்கலை அலுவலர் ராம் பிரசாத், 70106 81662, உதவி தோட்டக்கலை அலுவலர் பிரித்தா, 73958 55683 என்ற எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கோபிநாத் தெரிவித்துள்ளார்.

# மனைவி நல வேட்பு விழா



தாராபுரம், நவ. 1

தாராபுரம் அறிவு திருக்கோவிலின்29வது ஆண்டு விழா, அருட்தந்தை வேதாந்திரி மகரிஷியின் 113 வது ஜெயந்தி விழா, அன்னை லோகாம்பாள் 109வது பிறந்தநாள் மற்றும் மனைவி நல வேட்பு விழா ஆகிய முப்பெரும் விழா தாராபுரம் அரிமா சங்க அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் தாராபுரம் அறிவுத்திருக்கோவில் அறக்கட்டளை தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கி பேசினார்.துணைத் தலைவர் மருத்துவர் தங்கராசு வரவேற்புரையாற்றினார். செயலாளர் ஆயிமுத்துரத்தினம் , பொருளாளர் கோபால கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேராசிரியர்அருட்செல்வி தம்பதியினர் உயிர்கலப்பு தவம் மற்றும் மலர் கனி பரிமாற்றம் செய்து வைத்தார்.

அதில் 106 தம்பதிகள் கலந்து கொண்டு மாலை மாற்றி,மலர் மற்றும் கனி பரிமாறிக்கொண்டனர். அதைத் தொடர்ந்து பேராசிரியர் நீலகண்டன் மனவளக்கலையின் மாண்பு குறித்து பேசினார்.இதில் அரிமா சிவக்குமார் மற்றும் அரிமா சங்க அறக்கட்டளைநிர்வாகிகள், தாராபுரம் அறிவுத்திருக்கோவில் நிர்வாகிகள், தம்பதிகள் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் தாராபுரம் நகர அரிமா சங்க அறக்கட்டளை தலைவர் கோபால கிருஷ்ணன் நன்றி கூறினார்.

# தீபாவளி திருடர்கள்: உஷாராக இருக்க போலீசார் அறிவுறுத்தல்

திருப்பூர், நவ. 1

திருப்பூரில் வெளி மாவட்ட, மாநில மக்கள் அதிகமாக வசித்து வருகின்றனர். இவர்கள் தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களில் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம்.

ஊரில் உள்ள தங்களது குடும்பத்தினர், உறவினர்களுக்கு துணி, பொருட்கள் உள்ளிட்டவை வாங்கி செல்வர். பண்டிகை காலங்களில் பழைய, புதிய பஸ் நிலையம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதும். தீபாவளி நெருங்கியுள்ள நிலையில் சில நாட்களாக திருப்பூர் குமரன் ரோடு, பழைய பஸ் நிலையம் , காதர் பேட்டை உட்பட மாநகரின் பிரதான ரோடு, முக்கிய சந்திப்பு பகுதிகளில் மாலை நேரங்களில் தற்காலிக துணிக்கடைகள், பலகார கடைகள், பர்னிச்சர் உள்ளிட்ட கடைகளில் மக்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகரித்து வருகிறது.கூட்ட நெரிசலில் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் திருடர்கள் கைவரிசை காட்ட முயற்சி செய்வர். இதை தடுக்க போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய ஆயத்தமாகி வருகின்றனர்.

முக்கிய இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்து கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர். குமரன் ரோட்டில் பாதசாரிகள் நடந்து செல்ல இருபுறமும் தடுப்புகளை ஏற்படுத்தவும் உள்ளனர்.தற்போது இருந்தே மக்கள் கூடும் இடங்கள், பஸ்களில் வழிப்பறி திருடர்கள், பிக்பாக்கெட் ஆசாமிகளை பிடிக்க தனிப்படை போலீசார் மப்டியில் ரோந்து சென்று வருகின்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# அதிமுக பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்: முன்னாள் அமைச்சர்கள் கே. ஏ.செங்கோட்டையன், செ.ம.வேலுசாமி பங்கேற்பு



ஈரோடு. நவ. 1

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி அதிமுக நிர்வாகிகளுக்கு பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் சத்தியமங்கலத்தில் நடைபெற்றது. பவானிசாகர் எம்எல்ஏ பண்ணாரி தலைமை தாங்கி பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், செ.ம.வேலுசாமி ஆகியோர் கலந்து கொண்டு பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர். இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் கே ஏ செங்கோட்டையன் பேசுகையில், 2016ல் 234 தொகுதிகளிலும் அதிமுக தனித்து போட்டியிட்டது. அதில் வெற்றியும் கண்டோம். மனதில் வைத்துக்கொள்ளுங்கள் கூட்டணி வரும். கவலைப்பட தேவையில்லை. மக்களின் அன்பை பெற்றால் தான் வெற்றி கிட்டும். வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதியில் நாம் வெற்றி பெறுவோம். 2026இல் அதிமுக வென்று எடப்பாடி முதலமைச்சர் ஆவார் இவ்வாறு அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பழனிச்சாமி, மாரப்பன், சிவராஜ், நகர செயலாளர்கள் மூர்த்தி, சுப்பிரமணியம் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர.

# தீபாவளி ஆடைகள் விற்பனை கொள்முதல் செய்ய திருப்பூர் காதர்பேட்டையில் குவியும் வியாபாரிகள்



திருப்பூர், நவ.1

அன்றாட பயன்பாட்டில் பின்னலாடைகளின் பங்களிப்பு அதிகரித்து விட்டது. ஆண்கள், பெண்கள், முதியோர், இளைஞர், இளம்பெண்கள், குழந்தைகள் என அனைத்து தரப்பினரும் டீசர்ட், ஷார்ட்ஸ், டிராக் பேன்ட், விளையாட்டு ஆடைகள், வாக்கிங் மற்றும் ஜிம் செல்லும்போது அணியும் ஆக்டிவ் பேன்ட் மற்றும் டீசர்ட் என பல் வகை ஆடைகளை பயன்படுத்தி வருகின்றனர்.

இதுபோன்ற ஆடைகள் திருப்பூர் பனியன் நிறுவனங்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது தீபாவளியையொட்டி பின்னலாடைகளை வாங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் பின்னலாடை வர்த்தகம் திருப்பூரில் சூடு பிடித்துள்ளது. டீசர்ட், இரவு நேர ஆடைகள் மற்றும் உள்ளாடைகள் ஆகியவற்றை மொத்தமாக பொதுமக்கள் வாங்கி வருகின்றனர்.

மேலும் தீபாவளி விற்பனைக்காக கடந்த ஒரு மாதமாக, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மாநில வியாபாரிகள் ஆடை கொள்முதல் செய்து முடித்து விட்டனர். கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் தீபாவளிக்கு முந்தைய 10 நாட்கள் ஆடை விற்பனைகளைகட்டும். அதற்காக கடந்த சில நாட்களாக திருப்பூர் காதர்பேட்டை கடைகளில் விழாக்கால விற்பனைக்கான கொள்முதலும், ஆர்டர் விசாரணையும் பரபரப்பாக நடந்து வருகிறது.

தீபாவளி பண்டிகைக்கு 11 நாட்களே உள்ள நிலையில் வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி 6 நாட்கள்நடக்கும்விற்பனையே கைகொடுக்கும். அதற்காக குறு, சிறு வியாபாரிகள், புதிய ஆடைகளை, உள்ளாடைகளை கொள்முதல் செய்ய காதர்பேட்டை மொத்த விற்பனை கடைகளில் குவிந்து வருகின்றனர். பொதுமக்களும் ஆடைகள் வாங்க வருகின்றனர். இதனால் திருப்பூர் காதர் பேட்டை பகுதிகளை கட்ட தொடங்கி உள்ளது.

# பள்ளி பகுதியில் டிவைடர்கள் வைக்க பெற்றோர்கள் கோரிக்கை

உடுமலை, நவ. 1

உடுமலை பொள்ளாச்சி தாராபுரம் மாநில நெடுஞ்சாலையை ஒட்டி கொங்கல்நகரம் அரசு உயர்நிலைப்பள்ளி, சோமவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உட்பட பள்ளிகள் அமைந்துள்ளது.பல்வேறு கிராமங்களில் இருந்து பள்ளிக்கு வரும் மாணவர்கள் மாநில நெடுஞ்சாலையை கடந்து செல்கின்றனர்.

அப்போது ரோட்டில் வேகமாக வரும் வாகனங்களால் மாணவர்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறுகிறது. இப்பிரச்சினைக்கு தீர்வாக பள்ளி மாணவ, மாணவிகள் ரோட்டை கடக்கும் இடத்தில் டிவைடர்கள் வைக்க வலியுறுத்தப்பட்டது. அதன்படி சில ஆண்டுகளுக்கு முன், சோமவாரப்பட்டியில், மாநில நெடுஞ்சாலையில் டிவைடர் வைக்கப்பட்டது. சில மாதங்களில் அங்கிருந்து அகற்றப்பட்ட டிவைடர் மீண்டும் வைக்கப் படவில்லை. இதே போல் கொங்கல்நகரம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு பொட்டையம்பாளையம், லிங்கம்மாவூர், புதூர் உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் வருகின்றனர். நெடுஞ்சாலையை ஒட்டி பள்ளி அமைந்துள்ளதால் காலை மற்றும் மாலை நேரங்களில் மாணவர்கள் ரோட்டை கடக்க சிரமப்படுகின்றனர்.

எனவே குடிமங்கலம் போலீசார், பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளில் மாணவர்கள் பாதுகாப்புக்காக மாநில நெடுஞ்சாலையில் டிவைடர் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தளி கோட்டை மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்: 3ந்தேதி நடக்கிறது



உடுமலை, நவ. 1

உடுமலையை அடுத்த தளி பகுதியில் கோட்டை மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலை புனரமைப்பு செய்து கும்பாபிஷேகம் நடத்துவதென ஊர் பொதுமக்கள் சார்பில் முடிவு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து கடந்த சில மாதங்களாக பணிகள் நடைபெற்று வந்தது. பணிகள் நிறைவுற்ற நிலையில் வருகின்ற 3ந்தேதி கோட்டை மாரியம்மன் மற்றும் பரிவார தெய்வங்களான விநாயகர், முருகன், மகாலட்சுமி, துர்க்கை, கருப்பராயசாமி, சப்த கன்னிமார் மற்றும் கோஸ்ட சக்தி உள்ளிட்ட கடவுள்களுக்கு கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. விழாவின் முதல் நிகழ்ச்சியாக வருகிற 1ந்தேதி காலை 9.15 மணிக்கு வாஸ்து சாந்தி, கணபதி பூஜையும், மாலை 6 மணிக்கு முதல் கால யாக பூஜை நடைபெற உள்ளது. 2ந் தேதி காலை 9.15 மணிக்கு 2ம் கால யாக பூஜையும், மாலை 6 மணிக்கு 3ம் கால யாக பூஜையும் நடக்கிறது. 3ந்தேதி காலை 6 மணிக்கு 4ம் கால யாக பூஜையும், 8.15 மணிக்கு யாக சாலையில் இருந்து கலசங்கள் உலா வருதல் நிகழ்ச்சியும், அதை தொடர்ந்து 8.35 மணிக்கு கோட்டை மாரியம்மன் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்து வருகின்றனர்.

# பி.ஏ.பி., தண்ணீர் திருட்டு: விவசாயிகள் பரபரப்பு புகார்



திருப்பூர், நவ 1

பி.ஏ.பி., விவசாயிகள் நலச்சங்கம், உப்பாறு அணை விவசாயிகள் சங்கம் மற்றும் பூசரநாயக்கன்பாளையம் ஏரி விவசாயிகள் சங்கத்தினர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

பி.ஏ.பி., தண்ணீரை ஒரு குறிப்பிட்ட கிணறு வாயிலாக, 35 நாட்களாக தினமும் 22 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் திருடப்பட்டு 100 டேங்கர் லாரி அளவுக்கு விற்கப்பட்டுள்ளது. ஆதார பூர்வ புகாரை பி.ஏ.பி., விவசாயிகள் சங்கத்தினர் உடுமலை டி. எஸ்.பி.,க்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில் நீர் திருட்டு உறுதி செய்யப்பட்டுவிட்டது. குறிப்பிட்ட நீர் திருட்டு வாயிலாக மட்டும், பி.ஏ.பி., தண்ணீர் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு விற்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று பல்வேறு இடங்களில் நீர் திருட்டு நடந்து வருவதால் 2 சுற்றுகள் வினியோகம் செய்யப்பட வேண்டிய தண்ணீர் ஒரே சுற்று அளவுக்கு நான்காம் மண்டல ஆயக்கட்டுதாரர்களுக்கு அரை, குறையாக வினியோகம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

பி.ஏ.பி., வெள்ளக்கோவில் கிளை கால்வாய் (காங்கயம் வெள்ளகோவில்) நீர் பாதுகாப்பு சங்க செயலாளர் வேலுசாமி கூறுகையில், பி.ஏ.பி., கால்வாயில் திறந்துவிடப்படும் தண்ணீர் பல இடங்களில் திருடப்படுகிறது என தொடர்ந்து கூறி வருகிறோம்.இதனால் 2 சுற்றுகளுக்குவினியோகம் செய்யப்பட வேண்டிய, 2,500 மில்லியன் கன அடி தண்ணீரை ஒரே சுற்றில் முடித்து விட்டனர். நீர் திருட்டை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம், பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# போலி வாரிசு சான்று மூலம் நிலத்தை அபகரித்த அண்ணன் மீது நடவடிக்கை எடுக்ககோரி தங்கை மனு



தருமபுரி, நவ.1

தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கனக ராணி என்பவர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அருகே கலெக்டர் பங்களா பின்புறம் உள்ள, வெத்தலக்காரன்பள்ளம் சாலைப் பகுதியை சேர்ந்தவர் கோபு, இவரது மனைவி கனகராணி (45). கனகராணியின், தந்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இந்நிலையில் தந்தை பெயரில் உள்ள பூர்வீக நிலத்தை, தனக்கு முறையாக பிரித்து தராமல், போலியான வாரிசு சான்று தயார் செய்து, தனது அண்ணன் அவரது மனைவி பெயருக்கு கிரையம் செய்து, அபகரித்துக் கொண்டு, எனக்கு கொலை மிரட்டல் விடுத்து வருகிறார்.

எனவேபூர்வீகநிலத்தை, போலி வாரிசு சான்று மூலம், அபகரித்து கொண்டு, கொலை மிரட்டல் விடுக்கும், அண்ணன் மீது நடவடிக்கை எடுத்து, பூர்வீகநிலத்தைமீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில்,தெரிவிக்கப்பட்டுள்ளது, அண்ணன் மீது நடவடிக்கை எடுக்க கோரி, தங்கை தருமபுரி எஸ்.பி அலுவலகத்தில் புகார் மனு வழங்கியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வீடுகளில் தனிநபர் இல்ல கழிப்பறை கட்டும் பணி: டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க திட்டம்



திருப்பூர், நவ. 1

திருப்பூர் மாவட்டத்தில் வீடுகளில்,தனிநபர்இல்ல கழிப்பறை அமைக்கப் பட்டு வருகிறது. அதன்படி அவிநாசி 314, தாராபுரம் 288, குடிமங்கலம் 174, காங்கயம் 298, குண்டடம் 484, மடத்துக்குளம் 84, மூலனூர் 50, பல்லடம் 215, பொங்கலூர் 261, திருப்பூர் 231, உடுமலை 303, ஊத்துக்குளி 249, வெள்ளகோவில் 194 என 3,145 வீடுகளில் தனிநபர் இல்ல கழிப்பறை அமைக்க அனுமதிக்கப்பட்டது.

தனிநபர் இல்லக்கழிப்பறை அமைக்க, கூடுதல் செலவு ஏற்பட்டதாலும், திறந்தவெளி மலம் கழிப்பதை கட்டுப்படுத்தும் வகையில், தனிநபர் இல்லக்கழிப்பிடம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் தனிநபர் இல்லக்கழிப்பறை அமைக்கும் பயனாளிக்கு பணிகள் நிறைவு செய்த பின் 12 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2022 23ம் நிதியாண்டில் திருப்பூர்மாவட்டத்தில் உள்ள 13 ஒன்றியங்களுக்கு 3,145 கழிப்பறைகள் கட்ட மானியம் ஒதுக்கப்பட்டது. அதாவது தலா 12 ஆயிரம் ரூபாய் வீதம், 3 கோடியே 77 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டது.

நிதியாண்டு கடந்து நடப்பு நிதியாண்டின் 6 மாதங்கள் முடிந்த பிறகும், கழிப்பிடம் அமைக்கும் இலக்கை எட்ட முடியாத நிலை தொடர்கிறது. கடந்த மாத நிலவரப்படி, 1,701 கழிப்பறைகள் மட்டும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக 2.04 கோடி ரூபாய் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் கூறுகையில், பணி முழுமையாக நிறைவு பெற்றால் மட்டுமே மானிய தொகை விடுவிக்கப்படும்.அதன்படி 40 சதவீதம் அளவுக்கு நிலுவை இருக்கிறது. இருப்பினும், டிசம்பர் மாத இறுதிக்குள் பணிகளை 100 சதவீதம் முடிக்க திட்டமிட்டுள்ளோம் என்றனர்.

# தேன்கனிகோட்டையில் யானை துப்பாக்கியால் சுட்டு கொலை



தேன்கனிக்கோட்டை, நவ. 1

தேன்கனிக்கோட்டை அருகேகாட்டு யானையை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு கொன்ற கொடூர சம்பவம் நடந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே ஜவளகிரி அடுத்து சென்னமாலம் கிராமம் வனப்பகுதியையொட்டி அமைந்துள்ளது.

இந்த வனப்பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் அடிக்கடி ஊருக்குள் புகுந்து தொடர் அட்டகாசம் செய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் தளி அருகே காட்டு யானை தாக்குதலில் முதியவர் ஒருவர் பலியானார் மேலும் விளை பயிர்களையும் யானைகள் நாசப்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் சென்னமாலம் கிராமத்தையொட்டி உள்ள கக்கமல்லேஸ்வரம் கோவில் பகுதியில் விவசாய தோட்டத்தில் நேற்று ஒரு காட்டு ஆண் யானை துப்பாக்கி குண்டு பாய்ந்து செத்து கிடந்தது. இதை பார்த்த கிராம மக்கள் ஜவளகிரி வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் உதவி வனபாதுகாவலர் ராஜமாரியப்பன் ஜவளகிரி வனசரக அலுவலர் முரளிதரன் வனவர்கள் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள் வனத்துறையினர் விரைந்து வந்து பார்வையிட்டனர். அப்போது காட்டு யானையை யாரோ மர்மநபர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது தெரியவந்தது.

இதையடுத்து வனத்துறை கால்நடை மருத்துவர் பிரகாஷ் மற்றும் மருந்துவ குழுவினரை வரவழைக்கப்பட்டு யானையின் உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு அதிலிருந்த 2 தந்தங்களும் மீட்கபட்டு, அருகில் உள்ள வனப்பகுதியில் யானையின் உடல் புதைக்கப்பட்டது.

துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்ட யானைக்கு 15 வயது இருக்கும் என்றும், அது ஆண் யானை என்றும், அந்த யானையை நாட்டு துப்பாக்கியால் மர்ம நபர்கள் சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

தொடர் அட்டகாசத்தில் காட்டு யானைகள் ஈடுபட்டு வந்ததால், மர்ம நபர்கள் ஆத்திரத்தில் காட்டு யானையை சுட்டுக் கொன்றிருக்கலாம் என வனத்துறையினர் சந்தேகிக்கிறார்கள். அதன்பேரில் ஜவளகிரி வனத்துறையினரும், போலீசாரும் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மேலும் உதவி வனப்பாதுகாவலர் ராஜமாரியப்பன் தலைமையில் 3வனசரக அலுவலர்கள் கொண்ட குழுவினரை அமைத்து மர்ம நபர்களை தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி மாணவியை கர்ப்பமாக்கிய கல்லூரி மாணவர்

திருப்பூர், நவ. 1

திருப்பூரில் உள்ள தனியார் கல்லூரியில் பேஷன் டிசைனிங் இரண்டாம் ஆண்டு படிக்கும் கல்லூரி மாணவி திருப்பூர் வடக்கு மகளிர் போலீசில் ஒரு புகார் மனு கொடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

நான் திருப்பூரில் உள்ள தனியார் கல்லூரியில் பேஷன் டிசைனிங் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். எனது தாய் சென்னையில் வேலை செய்து வருகிறார். நான் எனது தந்தையுடன் திருப்பூரில் தங்கி இருந்து படித்து வந்தேன்.

கல்லூரியில் என்னுடன் படிக்கும் வெற்றிவேல் (வயது 17) என்பவர் என்னுடன் நண்பராக பழகி வந்தார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு எனது தந்தை வெளியூருக்கு வேலைக்கு சென்று விட்டார்.

இதனை அறிந்து கொண்ட வெற்றிவேல் எனது வீட்டிற்கு வந்து நாம் இருவரும் சேர்ந்து படிக்கலாம் என கூறினார்.

அப்போது வெற்றிவேல் நான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறி என்னுடன் உல்லாசமாக இருந்தார். இதே போல் மீண்டும் ஒருமுறை உல்லாசத்திற்கு அழைத்த போது நான் மறுத்தேன். உடனே அவர், ஏற்கனவே உல்லாசமாக இருந்ததை வெளியே சொல்லி விடுவதாக மிரட்டி பலமுறை என்னுடன் உல்லாசமாக இருந்தார்.

இதனால் நான் கர்ப்பமானேன். இது குறித்து வெற்றிவேலிடம் கூறி தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி கூறினேன். ஆனால் அவர் மறுத்ததோடு இந்த கர்ப்பத்திற்கு நான் காரணம் இல்லை என்று கூறி என்னை மிரட்டி வருகிறார்.

எனவே என்னை காதலிப்பதாக கூறி கர்ப்பமாக்கிய வெற்றிவேல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர் கூறியிருந்தார்.

இந்த மனு குறித்து திருப்பூர் வடக்கு மகளிர் போலீசார் விசாரணை நடத்தி கல்லூரி மாணவர் வெற்றிவேல் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து கைது செய்தனர். பின்னர் அவரை திருப்பூர் சிறையில் அடைத்தனர்.

# கோடை காலம் தொடங்காமலேயே எகிறிய எலுமிச்சை பழம்

தருமபுரி, நவ.1

தருமபுரி மாவட்டத்தில் விளையும் எலுமிச்சை பழங்கள் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா, உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் தருமபுரி மாவட்டத்திற்கு எலுமிச்சை பழம் விற்பனைக்கு வருகிறது. கனிகளில் ராஜ கனியாக இருந்து வரும் எலுமிச்சை மருத்துவகுணம் நிறைந்து காணப்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்கப் பொதுமக்கள் எலுமிச்சை பழச் சாற்றை அதிகமாகப் பருகி வருகின்றனர். கடவுள் வழிபாடு, சைவ, அசைவ உணவகங்களில் அதிகமாக எலுமிச்சை பயன்படுத்தப்படுகிறது. இல்லத்தரசிகளின் வீடுகளிலும் எலுமிச்சை பழம் பயன்படுத்தப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் பெரும்பாலான டீ பிரியர்கள் பால் கலந்து டீ அருந்துவதை தவிர்த்து விட்டு எலுமிச்சை சாறு கலந்த டீ அருந்துவதால் பிரபலமாக (லெமன் டீ) விற்பனை செய்யப்படுகிறது. இதனால், எலுமிச்சை பழத்தின் தேவை அதிகரித்து உள்ளது. மழை மற்றும் பணியின் காரணமாக விளைச்சல் குறைந்து உள்ளதால் வரத்து குறைந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களிடத்தில் எலுமிச்சை பழத்தின் பயன்பாடு அதிகரித்து உள்ளதால் பல மாதங்களாக விலை உயர்ந்துள்ளது. முதல் தரமான பழம் ஒரு கிலோ ரூ.200க்கும் 2ம் தரம் ரூ.150க்கும், 3ம் தரம் ரூ.126க்கும் விற்பனையாகிறது. 2 மற்றும் 3வது தரமான பழங்கள் மட்டும் உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

முதல் தரமான பழங்கள் வெளிச் சந்தைகளுக்கு விற்பனைக்குச் செல்கின்றன. மூன்றாம் தரமான ஒரு எலுமிச்சைபழம் 5 ரூபாயும், இரண்டாம் தரமான ஒரு எலுமிச்சைபழம் 7 ரூபாயும், முதல் தரமான ஒரு எலுமிச்சை 10 ரூபாய் என விற்பனை செய்யப்படு கிறது. வரும் நாட்களில் உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ள தாக வியாபாரிகள் தெரிவிக்கின்ற னர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 01.11.2023



# ட்ரெண்ட் தான் மாறியிருக்கிறது.. சினிமா என்றுமே மாறாது ரம்பா



மலையாள சினிமா மூலம் திரையுலகில் கால் பதித்தவர் ரம்பா.

உழவன் படம் மூலம் தமிழ் சினிமவில் அறிமுகமானார்.

வெள்ளித் திரையில் ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித்குமார் என முன்னணி நடிகர்களுடன் கலக்கிய நட்சத்திர நடிகை ரம்பா கனடாவில் குடும்பத்தோடு வசிக்கிறார் .அவரோடு வந்த சிம்ரன், லைலா கோதிகா போன்ற நடிகைகள் இன்று பல முக்கிய படங்களில் நடித்து வருவதால் ரம்பாவுக்கும் நடிப்பின் மீதான ஆசை மீண்டும் வந்துள்ளது. ஏற்கனவே தெலுங்கு படத்தில் வாய்ப்புகள் வந்தாலும், தமிழில் மீண்டும் நடிக்கவே ஆர்வம் காட்டுகிறார்.

தனது 15 வயதிலேயே நடிகையாக மலையாள சினிமா மூலம் திரையுலகில் கால் பதித்தவர் ரம்பா. 1993 ல் உழவன் படம் மூலம் தமிழ் சினிமவில் அறிமுகமானார். அடுத்த 20 வருடங்கள் இந்திய திரையுலகில் கொடிகட்டிப் பறந்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், போஜ்புரி, இந்தி எனஇந்தியாவின்அனைத்து மொழிகளிலும் 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தார்.

உள்ளத்தை அள்ளித்தா படத்தில் நடித்து இளைஞர்களின் கனவுக்கன்னியாக தென்னிந்தியா முழுதும் வலம் வந்த இவர் திருமணத்திற்குப் பிறகு நடிப்பிலிருந்து விலகி இருந்தார். தற்போது மீண்டும் திரையுலகில் தன் நடிப்பு பயணத்தை தொடரவுள்ளதாக தெரிவித்துள்ளார். இச்செய்தி அவரது ரசிகர்களை பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது குறித்து நடிகை ரம்பா கூறியதாவது, திரையுலகில் வெகு சிலருக்கு மட்டுமே கிடைக்கும் கனவுக்கன்னி அடையாளமும், புகழும் எனக்கு கிடைத்தது. அதை நினைத்து எப்போதும் எனக்கு பெருமை தான். நான் நடிக்கும் காலத்தில் மிக ஜாலியாக சுட்டிப்பெண்ணாக இருந்தேன். திருமணத்திற்கு பிறகு கூட எல்லோரும் கேட்டார்கள் என டிவிக்களில் ஷோ செய்தேன், ஆனால் குழந்தைகள் என்னை மிஸ் செய்கிறார்கள் எனத் தெரிந்தபோது நடிப்பதை நிறுத்தி விட்டேன். இரண்டு பெண் குழந்தைகள், ஒரு பையன் என அழகான குடும்பம். ஒரு நடிகையாக நான் உணர்ந்ததே இல்லை, ஒரு நல்ல அம்மாவாக மனைவியாகவே இருந்தேன்.

இப்போது குழந்தைகள் வளர்ந்துவிட்டார்கள். இப்போதும் ரசிகர்கள் என்னை ஞாபகமாக கேட்பதும் பாராட்டுவதும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர்களின் அன்புதான் மீண்டும் நடிக்கலாம் என்ற எண்ணத்தைத் தூண்டியது. சினிமாவை தொடர்ந்து கவனித்து கொண்டுதான் இருக்கிறேன். இப்போது சினிமாவின் ட்ரெண்ட் மாறியிருக்கிறது. ஆனால் சினிமா என்றுமே மாறாது. இப்போதும் சினிமா நண்பர்கள் உடன்பலவிஷயங்கள்பேசிக்கொண்டு இருப்பேன். என்வயதுக்கேற்றவித்தியாசமான கதாப்பாத்திரங்களில் நடிக்க வேண்டும். அதற்கான கதைகளை கேட்க ஆரம்பித்துள்ளேன். ரசிகர்கள் என்னை விரைவில் திரையில் பார்க்கலாம் என்றார்.

# சல்மான்கானை அவமதித்தாரா ரொனால்டோ..?



சமீபத்தில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக பாலிவுட் நடிகர் சல்மான்கானும் கால்பந்து வீரர் ரொனால்டோவும் பங்கேற்றனர். அந்த நிகழ்ச்சியில் சல்மான்கானை கண்டு கொள்ளாமல் ரொனால்டோ செல்வது போன்ற வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது.

அதில், நிகழ்ச்சி நடைபெறும் அரங்கிற்குள் தனது மனைவியுடன் உள்ளே நுழையும் ரொனால்டோ, அங்கு நின்று கொண்டு இருந்த சல்மான்கானை கண்டு கொள்ளாமல் செல்வார். இந்த வீடியோ வைரலானது. இதற்கு சல்மான்கானை ரொனால்டோ அவமதித்து விட்டதாக ரசிகர்கள்பலர்கருத்து தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில்அந்தநிகழ்ச்சியில்இருவரும்சந்தித்து பேசுவது போன்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. அந்த புகைப்படத்தில் சல்மான்கானுடன் ரொனால்டோ சிரித்து பேசுவது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. இதனை ரசிகர்கள் தற்போது வேகமாக பகிர்ந்து வருகின்றனர்.



# கதாநாயகியை அதிரடியாக மாற்றிய மோகன் படக்குழு.. ஏன் தெரியுமா?



ஒரே இரவில் நடக்கும் கதையாக லேடீஸ் ஹாஸ்டல் பின்னணியில் உருவாகி இருக்கும் படம் 'ரா ..ரா ..சரசுக்கு ராரா' இந்தப் படத்தை ஸ்கை வாண்டர்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் ஏ ஜெயலட்சுமி தயாரித்துள்ளார். கேசவ் தெபுர் இயக்கியுள்ள இந்த படத்திற்கு ஜி.கே.வி. இசையமைத்துள்ளார். ஆர்.ரமேஷ் ஒளிப்பதிவு செய்துள்ளார். 9V ஸ்டுடியோஸ் நிறுவனம் இப்படத்தை நவம்பர் 3ஆம் தேதி வெளியிடுகிறது. இப்படத்தின் அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது.

இதில், விநியோகஸ்தர்கள் ரமேஷ் சுப்பிரமணியன், அஞ்சலி முருகன், படத்தின் இசையமைப்பாளர் ஜி.கே.வி, எழுத்தாளர் பொன். முருகன்,கலை இயக்குனர் ராமச்சந்திரன்,சண்டை இயக்குனர் ராஜாசாமி,பாடல் ஆசிரியர் சிவப்பிரகாசம், படத்தில் நடித்திருக்கும் மாரி வினோத், வில்லன் விஜய் பிரசாத், நடிகைகள் காயத்ரி, சிம்ரன், தீபிகா, சாரா அக்ஷயா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் விநியோகஸ்தர் சங்கத் தலைவர் கே .ராஜன் பேசியதாவது, இப்போதெல்லாம் பட விழாக்களுக்கு அதில் நடித்த நடிகைகள் வருவதில்லை. அந்த நிலையில் இங்கே வந்திருக்கிற இந்த நான்கு நடிகைகளை நான் பாராட்டுகிறேன். புதிதாக இவ்வளவு துணிச்சலாகத் தமிழ்ப் படம் எடுக்க வந்துள்ள தயாரிப்பாளருக்கு நான் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களுக்குப் போட்ட பணம் திரும்ப வந்துவிடும். இப்பொழுது எல்லாம் போட்ட பணம் திரும்பி வந்தாலே பெரிய விஷயம். அவுட்டோரில் வெளிப்புறங்களில் படம் எடுக்கும் போது நடக்கும்பிரச்சினைகளைப்பற்றி நாங்கள்மூன்று மாதங்களுக்கு முன்முதலமைச்சரைச் சந்தித்து ஒரு வேண்டுகோள் விடுத்தோம் .அவுட்டோர் லொகேஷன்களில் டிராபிக், போலீஸ் என்று ஏகப்பட்ட பேர் வந்து லஞ்சம் வாங்குகிறார்கள். தினசரி 25 ஆயிரம் ரூபாய் லஞ்சத்துக்கே கொடுக்க வேண்டியிருக்கிறது. இதை தடுத்து முறைப்படுத்த வேண்டும். தலைமைச் செயலகத்தில் சிங்கிள் விண்டோ சிஸ்டம் கொண்டு வர வேண்டும் அப்படி அமைத்து ஒருமுறை அனுமதி வாங்கிவிட்டால் தமிழ்நாட்டில் எங்கே சென்றாலும் பிரச்சினை இல்லாமல் படப்பிடிப்பு நடத்துவதற்கு அனுமதிக்கும் வகையில் வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். முதலமைச்சரும் பரிசீலிக்கிறோம் என்றார்.

நான் 2004 ல் இதே தலைப்பை என் படத்திற்கு வைத்தேன். ஆனால் அப்போது எதிர்ப்பு இருந்ததால் நான் பின் வாங்கி, விட்டு விட்டேன். ஆனால் இந்த தயாரிப்பாளர் போராடிஅதேதலைப்பைவாங்கி இருக்கிறார்.அவருக்கு என்பாராட்டுக்கள்இவ்வாறு பேசினார்.

# அவனவன் ஆயிரம் கதை சொல்லுவான்.. லியோ குறித்து மன்சூர் அலிகானின் புதிய வீடியோ



நடிகர்விஜய்நடிப்பில்வெளியாகி வசூலில் சாதனை படைத்து வரும் படம்லியோ.இயக்குனர்லோகேஷ் கனகராஜ் இயக்கிய இந்த படத்தில் அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படம் உலக அளவில் ரூ.540 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது. இதனை படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்து இருக்கிறது. படம் வெளியாகி 12 நாட்களில் ரூ. 540 கோடி வசூலித்து இருப்பதை விஜய் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

லியோ படத்தில் மன்சூர் அலிகான், ஃபிளாஷ்பேக் கதை சொல்லுவார். இந்த பிளாஷ்பேக் படத்தில் பெரியதாக ஒர்க் அவுட் ஆகவில்லை. ரசிகர்களிடையே பல விமர்சனங்கள் எழுந்தது. மன்சூர் அலிகான் பொய் சொல்லலாம் என்று படக்குழுவினர் தெரிவித்து இருந்தனர். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், மன்சூர் அலிகான் படத்தில் பேசிய வீடியோ காட்சியை படத்தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டு உள்ளது.

அந்த வீடியோவில், "அவனவன் ஆயிரத்தெட்டு கதை சொல்லுவான். ஒவ்வொன்னுக்கும் நிறைய பெர்ஸ்பெக்டிவ் இருக்கும். இது என்னோட பெர்ஸ்பெக்டிவ். 1999," என்று தெரிவித்து இருக்கிறார்.

# நடிகராக அறிமுகமாகும் எடிட்டரின் மகன்



சமீபத்தில் வெளியாகி, பெரும் வரவேற்பை பெற்ற இணைய தொடர்செங்களம்.

ஆர். பார்த்திபன் இயக்கும் படத்தில்நடித்துஇருக்கிறார்.

"சுந்தர பாண்டியன்", "இது கதிர்வேலன்காதல்" போன்ற திரைப்படங்களுக்கு எடிட்டராக பணியாற்றியவர் பிஜு. வி. டான் பாஸ்கோ. இவர் சமீபத்தில் வெளியான "செங்களம்" வெப் தொடருக்கு எடிட்டிங் செய்து இருந்தார். இந்த வெப் தொடர் பலராலும் பாராட்டப்பட்டது.

இவரது மூத்த மகன் பினு.டி. ஜான் பாஸ்கோ, தமிழ் திரைப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து வருகிறார். இவர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த "கோல்மால்" என்ற திரைப்படம் முழுக்க முழுக்க மொரிஷியஸில் படமாக்கப்பட்டது. அதில் அவர் நடித்த பிறகு அவருக்கு நிறைய பட வாய்ப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

அதில் முக்கியமாக தமிழ் திரைப்பட துறையில் முன்னணி இயக்குனராக இருக்கும் ஆர். பார்த்திபன் இயக்கும் படத்தில் நடித்து இருக்கிறார். படம் விரைவில் வெளிவர இருக்கிறது. இந்த படம் வெளிவந்த பிறகு அவர் தமிழ் திரையுலகின் தவிர்க்க முடியாத குழந்தை நட்சத்திரமாக வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதாக இயக்குனர் பார்த்திபன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# மீண்டும் வெளியாகும் இறுகப்பற்று திரைப்படம்



விக்ரம் பிரபு மற்றும் விதார்த் இணைந்து நடித்துள்ள திரைப்படம் 'இறுகப்பற்று'.

இப்படம் அக்டோபர் 6ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

இயக்குனர் யுவராஜ் தயாளன் இயக்கத்தில் நடிகர்கள் விக்ரம் பிரபு மற்றும் விதார்த் இணைந்து நடித்துள்ள திரைப்படம் 'இறுகப்பற்று'. இந்த படத்தில் ஸ்ரத்தா ஸ்ரீநாத், ஸ்ரீ, அபர்நதி, சானியா ஐயப்பன்ஆகியோர்முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பொடன்ஷியல் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜஸ்டின் பிரபாகர் இசையமைத்துள்ளார். இப்படம்அக்டோபர்6ஆம்தேதிதிரையரங்குகளில்வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், 'இறுகப்பற்று' படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் நவம்பர் 6ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

# இவ்வளவு சதம் அடிப்பேன் என்று நினைக்கவில்லை: மனம் திறந்த விராட் கோலி



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் கோலி, நடப்பு உலக கோப்பை தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த உலகக் கோப்பைத் தொடரில் இதுவரை ஒரு சதம் மற்றும் 3 அரைசதங்கள் என தனது அபார ஃபார்மில் உள்ளார். கடந்த அக்டோபர் 19 ஆம் தேதி வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில் ஒருநாள் போட்டிகளில் அவரது 48வது சதத்தைப் பதிவு செய்தார்.

ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் தற்போது 49சதங்களுடன் சச்சின் டெண்டுல்கர் உள்ளார். டெண்டுல்கரின் சாதனையை விராட் கோலி விரைவில் முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த அக்டோபர் 22 ஆம் தேதி நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் விராட் கோலி சதமடித்து சச்சினின் இந்த சாதனையை சமன் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது, இருப்பினும், அவர் 5 ரன்களில் சதமடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார். விராட் கோலி விரைவில் 50வது சதத்தை பூர்த்தி புதிய வரலாற்று சாதனை நிகழ்த்துவார் என அவரது ரசிகர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

இந்த நிலையில், தனது கிரிக்கெட் பயணத்தை தொடங்கும்போது இத்தனை ரன்கள் மற்றும் சதங்கள் அடிப்பேன் என நினைத்துக் கூட பார்க்கவில்லை என இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விராட் கோலி கூறியதாவது:

நான் எப்போதும் நிறைய சாதனைகள் செய்ய வேண்டும் என நினைப்பேன். ஆனால், எனது கிரிக்கெட் பயணத்தில் அந்த சாதனைகள் இவ்வாறுதான் இருக்கும் என்று நான் நினைத்ததில்லை. யாராலும் இதனை திட்டமிட முடியாது. இந்த 12 ஆண்டுகளிலில் இத்தனை ரன்கள் மற்றும் சதங்கள் அடிப்பேன் என நினைத்ததில்லை. அணிக்காக எனது சிறப்பான பங்களிப்பை வழங்க வேண்டும் என நினைப்பேன். என்னுடைய 100 சதவிகித உழைப்பை அதற்காக வழங்குவேன்" என்றார்.

# பெண்கள் ஆசிய சாம்பியன்ஸ் ஆக்கி: ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்த இந்தியா



பெண்களுக்கான7வது ஆசியசாம்பியன்ஸ்கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடந்து வருகிறது. இதில் நடப்பு சாம்பியன் ஜப்பான், 3 முறை சாம்பியனான தென்கொரியா, முன்னாள்சாம்பியனான இந்தியா மற்றும் சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய 6 அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இதில் நேற்றிரவு நடந்த லீக் போட்டியில் இந்தியா 21 என்ற கோல் கணக்கில் ஆசிய விளையாட்டு சாம்பியனான சீனாவை தோற்கடித்து அரைஇறுதியை எட்டியது. இந்திய அணியின் சார்பில் தீபிகா, சலிமா ஆகியோர் ஒரு கோல் அடித்து அசத்தினர்.

இது இந்தியாவுக்கு இது 'ஹாட்ரிக்' வெற்றியாகும். ஏற்கனவே தாய்லாந்து, மலேசியாவை வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.



# ஐ.எஸ்.எல். கால்பந்து: பஞ்சாப்பை வீழ்த்திய சென்னை அணி

கால்பந்து உலகின் மிக உயரிய விருதான பலோன் டி 'ஓர் விருதை சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைக்கு வருடந்தோறும் பிபா வழங்கி வருகிறது. 1956ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டுக்கான பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் பட்டியலில் 60 (30 ஆண் மற்றும் 30 பெண்) பேர் இடம் பெற்றிருந்தனர்..

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான பலோன் டி'ஓர் விருதை அர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி 8வது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார். கடந்த ஆண்டுடிசம்பரில்கத்தாரில்நடந்தஉலகக்கோப்பையை அர்ஜென்டினா வெல்வதில் முக்கிய பங்கு வகித்தார் லியோனல்மெஸ்சி. அவர்ஏழுகோல்களைஅடித்துடன் நான்கு ஆட்ட நாயகன் விருதுகளையும் வென்று அசத்தினார். முன்னதாக இந்த விருதுக்கு அதிகமுறை பரிந்துரைக்கப்பட்ட வீரர் என்ற சாதனையை மெஸ்சி படைத்திருந்தார். மேலும் அதிகமுறை இந்த விருதை வென்றவரும் இவரே. மெஸ்சி இதுவரை 7 முறை இந்த விருதை வென்றிருந்தார். இந்த விருத்துக்கான போட்டி பட்டியலில் எம்பாப்பே மற்றும் எர்லிங் ஹாலண்ட் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

மெஸ்ஸி 2009 இல் தனது முதல் பலோன் டி'ஓர் விருதை வென்றார், அதைத் தொடர்ந்து 2010, 2011, 2012, 2015, 2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் வென்று அசத்தியிருந்தார்.

அதே நேரத்தில் உலகக் கோப்பை வென்ற ஸ்பெயின் நட்சத்திர வீராங்கனை அடானா பொன்மதி, பெண்களுக்கான பலோன் டி'ஓர் விருதை கைப்பற்றினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.